வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 06.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

சட்ட மாமேதை, பாரத ரத்னா, டாக்டர் பி ஆர் அம்பேத்கரின் 69 ஆவது நினைவு நாள் இன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்பட்டது.

9 ஆவது பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியை ஒட்டி, மை கவ் போர்ட்டலில் நாடு தழுவிய அளவில் கேள்வி, பதில் போட்டி நடைபெற்று வருகிறது.

இந்தியாவும், ரஷ்யாவும், 2030 ஆம் ஆண்டிற்குள், இருதரப்பு வர்த்தகத்தை 100 பில்லியன் டாலர்களாக உயர்த்த உறுதி பூண்டுள்ளன.

பயண திட்டங்களால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு இண்டிகோ நிறுவனம் விமான கட்டணங்களை நாளை இரவு 8 மணிக்குள் திரும்ப செலுத்துமாறும், சிவில் விமான போக்கவரத்து அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது

*அம்பேத்கர் 1* (19)

சட்ட மாமேதை, பாரத ரத்னா, டாக்டர் பி ஆர் அம்பேத்கரின் 69 ஆவது நினைவு நாளை ஒட்டி, புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அவரது சிலைக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர். நீதி, சமத்துவம் மற்றும் அரசியல் அமைப்பில் அம்பேத்கர் கொண்டிருந்த தீர்க்கமான உறுதிப்பாடு தேசத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்து வழிகாட்டுவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தமது சமூக ஊடகப்பதிவில் தெரிவித்துள்ளார். மனித குலத்தின் மரியாதையை நிலைநாட்டியது மற்றும் ஜனநாயகத்தின் விழுமியங்களை வலுப்படுத்தியதன் மூலம் அடுத்த தலைமுறையினருக்கு அம்பேத்கர் ஒரு உந்து சக்தியாக திகழ்வதாகவும், அவரது கொள்கைகள் வளர்ச்சியடைந்த பாரதத்தினை

உருவாக்கும் நமது முயற்சிக்கு வழிகாட்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் தமது சமூக ஊடகப்பதிவில், அண்ணல் அம்பேத்கரின், சமத்துவம், கண்ணியம் மற்றும் சகோதரத்துவத்திற்கான இடைவிடாத போராட்டம், நவீன இந்தியாவிற்கு அடித்தளம் இட்டதாகவும், நீதி மற்றும் இணக்கமான சமூகத்தை நோக்கிய தேசிய பயணத்திற்கு அம்பேத்கரின் தொலைநோக்கு கருத்துக்கள் தொடர்ந்து வழிநடத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

*அம்பேத்கர் புதுச்சேரி* 1 (14)

டாக்டர் அம்பேத்கரின் நினைவுநாளை ஒட்டி, புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. புதுச்சேரி பாரதி பூங்காவில் அமைந்துள்ள அவரது திரு உருவ சிலைக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், அமைச்சர்கள் திரு நமச்சிவாயம், திரு லட்சுமிநாராயணன், உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதனை தொடர்ந்து, கடற்கரை சாலையில் அமைந்துள்ள அம்பேத்கர் மணிமண்டபத்தில் உள்ள அவரது திரு உருவ சிலைக்கும் மரியாதை செலுத்தப்பட்டது.

காரைக்கால் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர் மற்றும் உயரதிகாரிகள் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

*அம்பேத்கர் புதுச்சேரி* 2 (6)

புதுச்சேரி ஆகாஷ்வாணியில் அம்பேத்கர் நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அம்பேத்கரின் திருவுருவ படத்திற்கு, நிகழ்ச்சிப் பிரிவு தலைவர் மயிலாடுதுறை திரு. த. செந்தில் குமார் தலைமையில், உதவிப் பொறியாளர் திருமதி. ஆர். ஜெயந்தி, நிகழ்ச்சி அமைப்பாளர், ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் கேந்திரா ஊழியர்கள், கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

*பரிக்ஷா பே சர்ச்சா* 1 (6)

9 ஆவது பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சி வரும் ஜனவரி மாதம் நடைபெற உள்ளது. மாணவர்கள் இடையே, தேர்வின் போது ஏற்படும் மன

அழுத்தங்கள் குறித்து விவாதிக்கவும், அதனை போக்கும் வகையிலும், பிரதமர் திரு நரேந்திர மோடி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருடன் உரையாடும் இந்நிகழ்ச்சி, கடந்த 8 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. பரிக்ஷா பே சர்ச்சா குறித்த கூடுதல் தகவல்கள்……..

*பரிக்ஷா பே சர்ச்சா* 1 (16)

பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியின் 9 ஆவது பதிப்பிற்கு முன்னதாக, மை கவ் போர்ட்டலில் நாடு தழுவிய அளவில் கேள்வி, பதில் போட்டி நடைபெற்று வருகிறது. 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் தங்களது ஆசிரியர் மற்றும் பெற்றோருடன் இப்போட்டிகளில் பங்கேற்கலாம். வரும் ஜனவரி மாதம் 11 ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் பங்கேற்கும் மாணவர்களுக்கு, பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படும். 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சி 245 க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த மாணவர்கள், 153 நாடுகளை சேர்ந்த ஆசிரியர்கள், மற்றும், 149 நாடுகளை சேர்ந்த பெற்றோர்களின் பங்கேற்புடன் கின்னஸ் உலக சாதனையை படைத்தது. இந்நிகழ்ச்சி, கடந்த 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போது 22 ஆயிரம் பங்கேற்பாளர்கள் மட்டுமே இருந்த நிலையில், 2025 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சியின் 8 ஆவது பதிப்பில், 3.56 கோடி பங்கேற்பாளர்கள் என்ற அசாதாரண வளர்ச்சியை கண்டுள்ளது. இத்துடன் பரிக்ஷா பே சர்ச்சா 2025 தொடர்பான நாடு தழுவிய ஜன் அன்தோலன் நடவடிக்கைகளில் 1.55 கோடி மக்கள் பங்கேற்றனர். இதன் மூலம் மொத்த பங்கேற்பு சுமார் 5 கோடியாக உயர்ந்துள்ளது.

*அமித் ஷா* (8)

நாட்டின் அடுத்த 5 ஆண்டுகளில் பால் வளத்துறையில் சுழற்சி பொருளாதாரம் மூலம், கால்நடை விவசாயிகளின் வருவாயை 20 சதவிகிதம் அளவிற்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். குஜராத் மாநிலம் சனாதர் பனாஸ் பால்வள ஆலை நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், இந்த ஆலையில் செயல்படுத்தப்படும் பொருளாதார சூழல் திட்டம் அனைத்து மாநில பால்வள பிரிவுகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று கூறினார்.

*புடின்* (13)

இந்தியா-ரஷ்யா இடையேயான 23 ஆவது வர்த்தக உச்சி மாநாட்டில் பங்கேற்க 2 நாள் பயணமாக புதுடெல்லி வந்த ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடினை கவுரவிக்கும் வகையில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு

நேற்று மாலை விருந்து அளித்தார். இந்தியா மற்றும் ரஷ்யா இடையே அமைதி, ஸ்திரத்தன்மை, பரஸ்பர சமூக-பொருளாதார மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ரஷ்ய அதிபர் திரு புடின் அளித்து வரும் ஆதரவு மற்றும் இந்தியாவுடனான தனிப்பட்ட அவரது நட்பையும், திருமதி முர்மு பாராட்டினார். முன்னதாக, திரு புடின், பிரதமர் திரு நரேந்திரமோடியை சந்தித்து, இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார். இரு நாடுகளுக்கு இடையே, பொருளாதாரம், கப்பல் கட்டுமானம், உரம், மனிதநேயம் உள்ளிட்ட 16 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இரு நாடுகளும் 2030 ஆம் ஆண்டிற்குள், இருதரப்பு வர்த்தகத்தை 100 பில்லியன் டாலர்களாக உயர்த்த உறுதி பூண்டுள்ளன.

S-I-R (18)

2 ஆம் கட்ட வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணிகள் தொடங்கப்பட்டதில் இருந்து 50 கோடியே, 93 லட்சத்திற்கும் அதிகமான படிவங்கள் வாக்காளர்கள் இடையே விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல ஆணையம் இன்று தெரிவித்துள்ளது. இதுவரை, சுமார் 49 கோடி படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த ஆண்டு பிப்ரவரி 14 ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரியில் கடந்த மாதம் 4 ஆம் தேதி தொடங்கிய எஸ்ஐஆர் எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் வரும் 11 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இப்பணிகளில் பிஎல்ஓ -கள் எனப்படும் வாக்குச்சாவடி நிலை அதிகாரிகளின் பங்கு முக்கியமானதாக உள்ளது. வீடு வீடாக சென்று வாக்காளர் கணக்கெடுப்பு படிவத்தை வழங்குவதிலும், பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை திரும்ப பெறுவதிலும் முக்கிய பங்காற்றி வருகிறார்கள். அந்த வகையில், திருவண்டார்கோவில் பகுதியில், பிஎல்ஓ வாக பணியாற்றும் செல்வி பாரதி, எஸ்ஐஆர் பணிகளில் வாக்காளர்களின் ஒத்துழைப்பு சிறப்பாக இருப்பதாகவும், படிவங்களை நிரப்பி தருவதில் வாக்காளர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுவதாகவும் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்........

ரம்மோகன் நாயுடு (16)

விமானிகள் பற்றாக்குறை காரணமாக நாடு முழுவதும் விமான சேவை நிறுத்தப்பட்ட நிலையில், இண்டிகோ ஏர் லைன்ஸ் பயணிகள் விமான சேவை சென்னையில் இருந்து இன்று அதிகாலை 3 மணி முதல் மீண்டும் தொடங்கியது. மேலும், இன்று ஒரே நாளில் மொத்தம் 48 இண்டிகோ ஏர் லைன்ஸ் விமானங்கள் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் 10 ஆம் தேதி முதல் வழக்கமான விமான சேவைகள் தொடரும் என்றும்

தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பயண திட்டங்களால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு விமான கட்டணங்களை நாளை இரவு 8 மணிக்குள் திரும்ப செலுத்துமாறும், அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. விமான பயணிகளின் நலன் கருதி, கட்டணங்கள் நியாயமாக இருப்பதை உறுதி செய்ய மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் சில ஒழுங்கு முறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்கிடையே, இண்டிகோ விமானங்கள் திடிரென ரத்து செய்யப்பட்ட விவகாரத்தின் பின்னனி குறித்து ஆராய குழு அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

ஜிதேந்தி￼சிங் (10)

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 11 ஆவது இந்திய சர்வதேச அறிவியல் விழா ஹரியானா மாநிலம் பஞ்ச் குலாவில் உள்ள தசரா மைதானத்தில் தொடங்கியது. மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் மற்றும் ஹரியான மாநில சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு ஸ்ரீ கிருஷ்ணா பேடி ஆகியோர் இணைந்து இவ்விழாவினை தொடங்கி வைத்தனர். இளம் தலைமுறையினருக்கு கல்வி கற்பிப்பதும், அறிவியலின் சாதனைகளை கொண்டாடுவதும் இவ்விழாவின் நோக்கம் என்று தொடக்க நிகழ்ச்சியில் உரையாற்றிய டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

வானிலை (5)

தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

விளையாட்டு (6)

இந்தியா-தென் ஆப்பிரிக்கா அணிகளுக்கு இடையே விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வரும் 3 ஆவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்ற இந்தியா பந்து வீச்சை தேர்ந்தெடுத்து. முதலில் ஆடிய தென்னாப்பிரிக்க அணி, இந்திய அணிக்கு 271 ரன்னை

வெற்றி இலக்காக நிர்ணயித்துள்ளது. முன்னதாக நடைபெற்ற இரண்டு ஒரு நாள் போட்டிகளில், 1 க்கு 1, என்ற புள்ளி கணக்கில் இரு அணிகளும் சம நிலையில் உள்ளன.